1

# பிள்ளையார் பட்டி

# திருவீசர் மணி மாலை

பரிதிமதி

**Prof. Dr. R. RAVICHANDRAN**
F 101, Ram Adithya Apartments,
19/6 Nagappa street, Pipeline
‘A’ Cross Malleswaram,
Bangalore - 560 003.
Karnataka

# முன்னுரை

சுகாம்ருதம் உடல் நலம் இலக்கியம் செய் வல்லமை
சயாதி நன்மை புத்திரர் செகத்தில் வாழ்வு சொல்வளம்
சிவாநுபூதிச் செல்வராய்ச் சிறந்த ஞானம் உற்றுநல்
மகா கணேசர் பாதமே அடைந்து வாழ்வர் மானிடர்

– ஆதிசங்கரர் அருளிய கணேச பஞ்சரத்னம்.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனாம்
தன்மையினாற் பணிமின் கனிந்து.

ஓம் எனும் ப்ரணவ மந்திரத்தின் உருவமாக, ஞான காரகனாம் கேது கிரகத்தின் நாயகனாக; எம்மதத்தவரும், எந்த இனத்தவரும் போற்றித் திகழும் மந்திரமூர்த்தி விநாயகக்கடவுள். விநாயகன் என்றால் அவருக்கு மேலே வேறே நாயகன் இல்லாதவன் என்று பொருள். சிரத்தில் கைகளால் குட்டிக் கொண்டு, தோப்புக்கரணம் போட்டு, கைகளால் தொழும் போது, தனது ஏற்றத்தாழ்வுகளை மனிதன் மறந்து விடுகிறான். ஔவைப்பாட்டி பிள்ளையாரைத் தொழுது, முதிர்ந்த கோலத்தை அடைந்து, தமிழுக்கு பணி செய்தது சிறிய குழந்தைகளுக்கும் தெரியும். அதிகம் சினம் கொள்ளும் தெய்வம். அதே வண்ணம் குழந்தை போல் சினத்தை மறந்து அருள்செய்யும் தெய்வம். முழுமுதற்கடவுள் எங்கள் விக்னேசுவரன். வக்ரதுண்ட, மகா காய சூர்ய கோடி சமமான ப்ரபாவத்தை உடைய கணநாதன். மகாபாரதத்தை வியாசருக்காக வரைந்தவர். அகத்தியமாமுனிவர் காவிரியை கிண்டிப் பாத்திரத்தில் அடைத்த போது, சிறுவனாக வந்து காவிரியை தமிழ்மண்ணில் பாய வைத்தவர். சரவணனின் வள்ளி திருமணத்தில் யானை வடிவில் வந்து உதவியவர். கஜமுக அசுரனை வதம் செய்ய ஒரு தந்தத்தை முறித்து எய்த போர்வீரர். நினைத்த

மாத்திரத்தில் உடனே வந்து நிற்கும் அருள் மூர்த்தியான விநாயகருக்கு ஒரு மணிமாலை புனைந்து தொழ முயற்சித்து இந்த கவிதைகளை நான் எழுதுகிறேன். அவரே இந்த நூலின் மூலம் எனக்கு காட்சி கொடுப்பார் என்பதை நான் கண்டிப்பாக நம்புகிறேன். அருணகிரிநாதரின் திருப்புகழையே கடவுள் வாழ்த்தாகக் கொண்டு இந்த சிறு முயற்சியைத் தொடங்குகிறேன்.



## கடவுள் வாழ்த்து

கைத்தல நிறைகனியப்ப மோடவல் பொரி
 கப்பிய கரிமுகனடி பேணிக்

கற்றிடு மடியவர் புத்தியிலுறைபவ
 கற்பகமென வினை கடிதேகும்

மத்தமும் மதியமும் வைத்திடு மரன்மகன்
 மற்பொரு திரள்புய மதயானை

மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
 மட்டவிழ் மலர் கொடு பணிவேனே

முத்தமிழடை வினை முற்படுகிரிதனில்
 முற்பட எழுதிய முதல் வோனே

முப்புரம் எரிசெய்த அச்சிவனுறை ரதம்
 அச்சது பொடி செய்த அதிதீரா

அத்துயரது கொடு சுப்பிரமணிபடும்
 அப்புண மதனிடை யிபமாகி

அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
 அக்கண மண மருள் பெருமானே.

சித்திபுத்தி விநாயகராம் கற்பகக்கடவுளைத் தொழுதேத்த அருள் புரிய வேண்டும். வேழ முகத்தோனே! உனக்கென்று ஒரு மலை திருச்சிராப்பள்ளிமலை. உனக்கென்று ஒரு ஊர் பிள்ளையார்பட்டி. உனக்கென்று ஒருகுளம் மணக்குளம், நீயே வேத நாயகன். உன்னைப் பணிந்து இந்தப் பாமாலையை உனது பாதார விந்தத்தில் சமர்ப்பிக்கிறேன்.

பரிதிமதி.

## திருமணி மாலை

1. ஞான முதல்வனாம் கணங்களின் தலைவனாம்
மோன நிலைமையில் வாழ்கின்ற தெய்வமாம்
ஈசனின் கரத்தினின்று மெய்ப்பொருள் பழத்தினை
பாசத்தைக் காட்டிப் பெற்றிற்ற அறிஞராம்.

2. கோள்களில் விக்னங்களை விலக்கி யகற்றி
தோள் கொண்டு அருள்புரிவான் மோன நிலையிலே
இளம் பிறை சதுர்த்தி தனில் மண்ணிலே உருவாகி
களங்கம் போக்கி நின்று காத்து அருளுவான்.

3. சமயங்கள் வேறில்லை கருத்துக்கள் வேறில்லை
உமையவளின் மகனாம் வேழ முகத்தினுக்கு
ஒசித்த கொம்பினால் கஷ்டங்களைத் தீர்த்து
வசிக்கும் பாரோர்க்கு சீர் தருவான் கணபதி.

4. மணக்குள விநாயகனாய் புதுச்சேரி புரிதன்னில்
குணக்குன்றாய் விளங்குகிறான் தோஷ நிவர்த்திக்கே
குருவாக அழைத்திட்டால் ஓடியே வந்திடுவான்
மருள்நீக்கும் தெய்வமே சாந்த மூர்த்தியாம்.

5. காவிரிக் கரையினிலே குளத்தின் மருங்கினிலே
மேவியிருந்திடுவான் ஆல மரத்தடியினிலே
எங்கும் நிறைந்திருக்கும் அருகம் புல்லினாலே
மங்காமல் துதி செய்தால் ஆசுவான் திண்ணமே.

6. பரஞ்சோதி தந்திட்டான் வாதாபி கணபதியை
திருச்செங்கட்டான் குடியினிலே இருக்கும் மூர்த்தியாய்
வீடணன் தாள்பட்ட மலைக்கோட்டை தனில் வாழ
சீடனின் உருவினிலே அமர்ந்திட்டான் கணபதியே.

7. ஆனைமுகத்தினான் அருள்புரி கண்ணினான்
ஆறுமுகத்தானின் தமையன் கடவுளாம்
நாற்கரங்கள் கொண்டு ஞானத்தினையருளும்
நகைமுகம் கொண்ட கருணா மூர்த்தியே.



8. செல்வ விநாயகன் சீர்பெற்றான் வேலூரில்
மல்கிடுவான் சுகங்கள் செயங்கள் அனைத்தையும்
சேண்பாக்க புரிதன்னை ஒருதரம் மிதித்திட்டால்
மாண்புடன் வைத்திடுவான் என் ஞானக்கடவுளே.

9. கற்பக விநாயகனுக்கு கரங்கள் இரண்டேயாம்
பொற்பினில் விளைந்திட்டான் சுயம்பு மூர்த்தியாக
ஒருதரம் மருதீசர் மகனை யடைந்திட்டால்
திருவீசர் கருணையுடன் காத்து அருளிடுவான்.

10. திருவீசன் சன்னதியில் சுயம்பு மூர்த்தியாக
மருவில்லா முக்கண்ணன் தோன்றியே நின்றான்
குறைவில்லா செல்வங்கள் அஷ்ட அயிஸ்வரியங்கள்
திறைதோன்றி நாளெல்லாம் மேவியருளிடுவான்.

11. முக்குறுணி நெல்லிலே மோதகம் செய்திடுவார்
பக்குவமாய்ப் படைக்க என்கணபா மூர்த்திக்கு
தென்மதுரை நகரினிலே கோலோச்சும் தெய்வமாய்
தென்திசை நோக்கி அமர்ந்து ஆட்சி செய்தான்.

12. ஓம்கார கணபதியாய் அமைதியாய் வீற்றிருக்கும்
தேம்பான குணக்குன்றே ராச கணபதியே
சீர்பெற்ற சுகவனாரின் சேலம் மாநகரினிலே
பேர்பெற்று விளங்குகிறாய் பேனகாமூர்த்தியே.

13. மோதகப் பிரியனே வாதாபி கணபதியே
சோதனைகளை நீக்கிடும் விக்கின விநாயகனே
இருபத்தி நான்கு பத்ரங்களில் அருச்சித்தால்
இருபத்தி நான்கு மணியில் சீராகக் காத்திடுவாய்.

14. பட்டாடை அணிவித்து நாக ஆபரணம்பூட்டி
மெட்டாக பாமாலை ஓதி வழிபட்டால்
தட்டாமல் தானே மெய்யாக வந்திடுவான்
எட்டுதிக்கும் கோலோச்சும் என்கருணாமூர்த்தியே.

15. நர்த்தனம் ஆடிடுவான் சுக்ல கணபதியே
பொற்பினில் சமர்செய்வான் வீரகணபதியே
கோகருணம் திருவூரில் தசமுக இராவணனை
ஏகாந்தமாய் ஏமாற்றிய மாயகணபதியே.

16. இங்கங் கெனதாபடி எங்கும் நிறைந்திருக்கும்
பாங்கான குணக்குன்றே பாரோரின் மூர்த்தியே
அன்பாகவே இரண்டு அக்ஷதையை அருச்சித்தால்
குன்றாக துணைநின்று விக்ன மகற்றிடுவான்.

17. கரும வினைகளைக் களைந்திட ஓர் உபாயம்
காருண்ய மூர்த்தியைப் பணிந்திடும் மார்க்கம்
தொந்தி கணபதியைச் சிக்கெனப் பிடித்துவிட்டால்
குந்தி வரம் கொடுப்பான் எந்நாளுமாசையாய்.

18. டுண்டி கணபதியாய்க் காசிமாநகர் தன்னில்
மண்டி வணங்குவோர்க்கு சீராக வரமருள்வான்
விசுவத்தை ஆளுகின்ற நாதனாம் ஈசனுக்கு
முன்பே வணங்கிடுவார் உன்னழகு மூர்த்தியையே.

19. விசனங்கள் தந்திடுவாய் உன்னையே மறந்திட்டால்
விசனங்கள் தீர்த்திடவே உன்னிடமே வரவழைப்பாய்
கணத்திலே மன்னிக்கும் பெருமை பேறுபெற்ற
கணத்தின் தலைவனாம் காருண்ய கணபதியே.

20. பசவனின் குடியிலே மலைபோன்ற உருத்தோற்றம்
ஹம்பி நகரந்தன்னில் கடுகான உருமாற்றம்
நீயில்லா இடமில்லை கடல் சூழ் பேருலகில்
நீயே எழுந்திட்டால் சினமானாய் என்றாகும்.

21. மருள்நீக்கும் கணநாதா மேதாவித் தோற்றமே
அருள்வாய் நீயெல்லோர்க்கும் ஆனந்த வாழ்க்கையே
எப்பேறு பெற்றேன் நான் உன்னையே சரணடைய
முப்பேறு வழங்கிடுவாய் கருணைபுரி வள்ளலே.



22. அந்தனச் சிறுவனாய் உன்னையே பார்த்திடுவோம்
நந்தனம் தனில் உனக்கே சிறுகுடிலமைத்திடுவோம்
ஏழைமகன் எந்தனுடைய இல்லிலே வந்திடுவாய்
வேழ முகத்தோனாய் எப்பொழுதும் இருந்திடுவாய்.

23. ஆற்றுப்படைபாடி நானுன்னை வரவழைத்து
ஏற்றமுடன் வாழ என்னாளும் அருள் செய்வாய்
இலக்குகள் ஏராளம் என்மனதிலிருந்தாலும்
இலக்குவனாக நான் வாழ எப்பொழுதும் அருளிடுவாய்

24. சிரசிலேகுட்டிக் கொண்டு தொழுகின்ற மூர்த்தியே
அரசனாய் நான் வாழ வேண்டுகிறேனுனையே
பரிசாக உனக்கு நான் என்னையே தந்திடுவேன்
முரசங்கள் பறைசாற்றி உன்னையே வேண்டுகிறேன்.

25. நந்திதேவன் மகனே நர்த்தன கணபதியே
புந்தியிலேயுனை நான் போற்றி புகழ்ந்திடுவேன்
உனக்கிருக்கும் பக்தர்கள் உலகினிலே ஏராளம்
நானும் உன் பக்தன்தான் காத்திடுவாய் கணநாதனே.

26. கன்னிமூல கணபதியாய் சபரிமலை முகட்டினிலே
அன்னியம் இல்லாமல் ஆதரிப்பாய் பக்தர்களை
ஐயப்பன் சோதரனே ஆதிமூல கணபதியே
மெய்ப்பிப்பாய் உன்னையே நின் கருணையன்புடனே.

27. திட்டங்கள் எல்லாமும் உன்னிடமே சமர்ப்பித்தால்
பெட்டாக உன் உபாயம் உடனே தந்திடுவாய்
உன்னையே பூரணமாய் நம்பிப் பற்றிட்டால்
முன்வினை தீர்ந்துவிடும் வேழ முகத்தவனே.

28. கரிவலம் வந்த நல்லூரில் கரியாக வீற்றிருப்பாய்
கரியமாலின் வாகனமாய்த் திருமலையில் நின்றிருப்பாய்
அயிராவத யானையாக இந்திரனின் சபையிலே
ஒயிலாக லக்குமியின் இருபுறம் நின்றிருப்பாய்

29. பலங்கொண்ட கரியாக உடலிலே திண்ணம்
மலம் சேரும் மனத்திலே குழவியான எண்ணம்
கண்களிலே எப்பொழுதும் காருண்யம் குடிகொள்ள
உன்னெழிலை வருணிக்க சொற்களுக்கு பஞ்சம்.

30. மடிதோன்றா உன்னுருவம் மனதிலே நினைப்பின்
படிப்படியாய் உயர்ச்சிகள் வாழ்க்யிலே கிட்டும்
எச்சரவாய் எப்பொழுதும் நீயிருக்கும் தோற்றம்
அச்சமதை மனதிலிருந்து களைகின்ற ஏற்றம்.

31. சோதனைகள் விசனங்கள் ஆயிரம் வந்தாலும்
சோதனே சுமுகனே ஏகநந்தனே என்றிட்டால்
கணத்திலே சோதனைகளை தீர்த்து விலக்கிடுவான்
கணநாதன் கருணை பாரெல்லாம் நிதர்சனம்.

32. பாற்கடலைக் கடைந்து அமிழ்தம் எடுத்தவுடன்
தீர்க்கமாய் எங்களுக்கு என்று அசுரர்கள் கூறு
தேவர்கள் சார்பாக உலகுய்ய வேண்டி
மும்மூர்த்திகளுக்காக அமிழ்தத்தைப் பதுக்கிட்டாய்.

33. உன்னுடைய செயல்கள் எப்பொழுதும் விந்தை
உன்னுடைய உருவமோ எல்லோர்க்கும் விந்தை
நாரதனின் கலகம் நன்மையில் முடியுமாம்
நாத கணபதியின் விக்னங்களும் நன்மையாம்.

34. நாள்தோறும் மன்பதையில் பூசைகள் ஏராளம்
வேள்விகள் யாகங்கள் இப்புவியில் ஆயிரம்
மங்கலமாய் மஞ்சளிலே கணபதியில்லாமல்
பூசைகளுமில்லை புனசுக் காரங்களுமில்லை.

35. திருவலம் சுழிதன்னில் கடல்நுரை உருவமாக
திருவலத்தில் உமையவளை மகேசுவரனை வலம் வந்தாய்
அவையடக்கம் எப்பொழுதும் கணபதியின் சின்னம்
புவியினிலே மேன்மைபெற உன்னையே தஞ்சம்.



36. ஓஜர் கணபதியை தரிசித்து வலம் வந்தால்
மாஜிக் கருமவினை கண்டிப்பாகத் தீர்ந்துவிடும்
எட்டு கணபதிகளப்பற்றியே பணிந்திட்டால்
அஷ்டலக்குமிகளும் அய்ஸ் வர்யங்கள் தந்திடுவார்.

37. கணபதி புழையினிலே ரத்னாகிரி தனிலே
குணவானாய் இருக்கின்றான் நின்ற உருவியிலே
மொட்டைத் தலையனாய் விளங்கும் பிள்ளையார்
கட்டோடு தீர்த்திடுவான் கஷ்டங்களனைத்தையும்.

38. நாம் செய்யும் கடமைகள் பாதியில் நின்று விட்டால்
ஓம் கார கணபதியின் பாதம் பற்ற வேண்டும்
அவனை நினைத்தவுடன் உடனேபதில் கிடைக்கும்
சிவனே கொடுக்காத தீர்வுகள் அனைத்திலும்.

39. பால சந்தரனார் உன் மௌலிமுடியிலே
மூலக் கருத்துக்கள் உன் ஞானமனத்துள்ளே
கேள்விகள் வேள்விகள்இவைகளின் கருத்தாய்
நாள் தோன்றும் வேளையில் நீயேதான் முதலாம்.

40. அங்கங்கள் மூலம் நாம் பூசை செய்தால்
பங்கில்லா பண்புகள் ஆயிரம் தருவார்
மங்காத புகழையும் மாண்போடு அறிவையும்
ஓங்கியே தருவார் முழுமுதற் கடவுளே.

41. தும்பிக்கை நாதனிடம் நம்பிக்கை வைத்தால்
தம்பிக்காக வனம்போந்த வேழ முதல்வன்
எம் பிரானருள் வேண்டும் பக்தர்களுக்காக
கும்பிடும் முன்பாக பரிந்துரைத்திடுவான்.

42. வித்தையைக் கற்பித்திட வித்யா கணபதி
புத்தியைத் தந்திட ஞான கணபதி
செல்வங்களித்திடுவான் செல்வ கணபதி
கூர்மையைக் கொடுத்திடுவான் கூத்தாடும் கணபதி.

43. எப்பொழுதும் நின் சிரஸில் ஒளிப் ப்ரபாவம்
முப்பொழுதும் நின் சன்னதியில் பக்தர்கள் கூட்டம்
ஈச்சனாரிப் பிள்ளையாராய்க் கோவை யூரில்
பாச்சூரில் பண்பாக அமர்ந்திருப்பாய் கணபதியே.

44. நாரையூரில் பொல்லாத பிள்ளையாரானாய்
பாறையிலே கற்பகப் பிள்ளையாரானாய்
யாருக்கும் மேலான பிள்ளையாரானாய்
பாருக்கே முழுமுதற் கடவுளாயானாய்.

45. நரியைப் பரியாக்கினார் மணிவாகருக்காக
நந்திதேவன் அரனாராம் நடராசமூர்த்தியே
தம்பி சுப்ரமண்யனை விருத்தனாக்கினார்
சுந்தர விநாயகராம் கணபதித் தெய்வமே.

46. மஹா கணபதியாய்க் கிளிக் கோபுரத்தருகினிலே
ஆகாச கணபதியே அண்ணாமலை நகரினிலே
எங்கள் அருணகிரி தமிழ்வள்ளல் ஆகுமுன்னே
பாங்காய் உனை வலம் வந்தான் அருணகிரி நகரினிலே.

47. ஆத்திசூடி பாடிய தமிழன்னை அவ்வையே
ஏத்தினாள் உன்னையே தன்தமிழ்ப் புலமைக்கே
முத்தமிழ்க் கடவுள் ஷண்முக ஸ்வரூபமாம்
முழுமுதற் கடவுள் ஞானத்தின் ஸ்வரூபமாம்.

48. இடுக்கணை நீக்கவே கிடுக்கிப் பிள்ளையாராய்
கொடுமுடியில் தீபமேற்றும் அருணையம் பதியிலே
கஷ்டங்களைத் தீர்க்க ஆதி அண்ணாமலையில்
இஷ்ட தெய்வமாய் வீற்றிருப்பார் என் கருணாமூர்த்தியே.

49. கணங்களுக்கு அரசனாம் இராஜ கணேசனே
மனங்களில் எல்லோர்க்கும் அரசாளும் ஈசனே
கொப்பரையில் உன்னை நாம் ஆவஹணம் செய்தால்
கப்பரையை எப்பொழுதும் நிறைத்திடுவாய் நீயே.



50. நெற்றியிலே திருநீறு தனைப் பூசியன்பால்
பற்றியேயுனை நானும் தண்டனிட்டு வணங்க
குறைவில்லாப் பெருமைகளை மேன்மேலும் நல்கி
நெறியாயிப் புவிதனிலே வாழ்வாங்கு செய்வாய்.

51. தங்கக் கவசத்தை எந்நாளும் போட்டிருப்பார்
மங்காத புகழ் நிற்க இம்மன்பதை வாழுமட்டும்
அருகம்புல் மாலையுடன் உன்னையே தொழுதால்
உருகும் நம் பாவங்கள் கசடுகளனைத்தையும்.

52. வெள்ளெருக்குப் பிள்ளையார் உள்ளழுக்குப் போக்குவார்
தெள்ளத் தெளிவாக மெய்ஞ்ஞானம் தந்திடுவார்
சந்தனத்தைப் பூசிப் பன்னீரில் குளிப்பாட்டி
மந்தகாசமாய்த் தொழுதேத்த பெருஞ்செல்வமளித்திடுவார்.

53. பராக்கிரமமாம் அசுரனை சிற்றெலியாக மாற்றி
முறம்போன்ற செவிகளால் சிற்றொலியைக் கேட்கும்
மேதாவித் தோற்றம் என் குறைகளெல்லாம் நீக்கும்
மாதாவாய்ப் புரந்தருளும் உன்னருமை நோக்கம்

54. உச்சிஷ்ட கணபதியாம் அழல் எரிநெருப்பிலே
மெச்சிட்ட உன்னுடைய விசுவரூப தோற்றம்
ஓம்கார கணபதியே பிரணவத்தின் பொருளே
நாமெல்லாம் மாண்போங்க தந்திடுவாய் நலமே.

55. திருமாலிருஞ்சோலை வசிக்கும் கணபதியே
திருச்சீரலைவாயிலில் அருள்புரி கணபதியே
சோலைமலை மீதில் வாழும் சீரான கணபதியே
தோகைமலை வான்முகட்டில் வந்த கணபதியே.

56. விராலிமலை மயில்கள்சூழ் பதியில் வாழ் கணபதியே
ஏரகத்து மாமலையில் வேதாந்த கணபதியே
இராமேச்சுரத்தில் அருள் செய்யும் தொந்தி கணபதியே
தண்டனிட்டேன் மன்னுலகைக் காத்திடுவாய் கணநாதா.

57. மகா கணபதியாய் அண்டமெல்லாம் ஆளுகின்றாய்
ராச கணபதியாய் கணங்களெல்லாம் ஆளுகின்றாய்
கற்பக கணபதியாய் அனைத்து செல்வங்களுமீந்தாய்
பஞ்சமுக கணபதியாய் பாரோரை வாழ வைக்கிறாய்.

58. சிவகெங்கைக் குளத்தருகே சிவ சுப்ரமண்ய கணபதி
புவனகிரி நகரினிலே சிற்றம் பலக்கணபதி
கோழியூராம் உறையூரில் ஹேரம்ப கணபதி
வாழுகின்றாய் வேலூரில் செல்வ கணபதியாய்.

59. செந்தாமரை மலர்தன்னில் பால கணபதியாக
மந்தாரை வனத்தினிலே மயூர கணபதியாக
துஷ்டர்களை தவம்செய்ய வீர கணபதியாக
கஷ்டங்களை நீக்கி அருள விஜய கணபதியாய்.

60. கண்முன்னே வந்து நிற்பாய் உன்னடியே சரணம்
மண்ணிலுள்ள சுகங்களை இழந்து நின்றேன் சரணம்
பண்ணினால் பாட்டெழுதி வேண்டி நின்றேன் சரணம்
வாதாபி கணபதியே பணிந்து நின்றேன் சரணம்.

61. மாதாபிதா குரு சோதியே யுனக்கு சரணம்
மேதாவியான ஸித்திபுத்தி கணபதியே சரணம்
ஹேரம்ப நாதனே மூஞ்சூறு வாகனனே சரணம்
பூர்வ வினை தீர்த்து ஞானசித்தி தருவாய் நீசரணம்.

62. முழுமுதற்கடவுளே முக்கண்ணன் தனயனே சரணம்
மெய்ஞ்ஞானக் கடவுளே ஆறுமுகன் சோதரனே சரணம்
உமையம்மை பாலனே ஓம்காரமூர்த்தியே சரணம்
பூமியிலே முதலான ஏகக்ஷர விநாயகா சரணம்.

63. வெற்றியைத் தந்திடுவான் திருப்புறம் புயம் கணபதி
பற்றினால் நிச்சயமாய் பாசத் தலையறுப்பான்
குறிப்பாக அவனிடம் விண்ணப்பம் செய்தால்
முறிப்பான் அவன் நம் முந்தை வினைகளனைத்தையும்.



64. ஓடைப்பிள்ளையாராய்க் காட்டுப் பாடியிலே
விடைகளைத் தந்திட்டாய் நின்சலன பாஷையிலே
உத்தண்டநாயகனாய் நீ செய்த தேராளம்
உனக்குத் தருவதற்கே ஒன்றுமே யில்லையே.

65. வழிகாட்ட எத்துணைப் பிள்ளையார் மூர்த்தியாய்
வழிநெடுக பக்தர்களுக்காய்ப் பழனி மலையிலே
மலையிலே ஏறுதல் மனித முயற்சியாம்
மலையின் படிகளாம் வாழ்க்கை சோதனைகளாம்.

66. எல்லாப் படிகளிலும் நீ நின்று காத்திருப்பாய்
இடறி விழுந்தால் தும்பிக்கையில் தாங்கிடுவாய்
விசுவரூபம் நீயெடுத்தால் தாங்காது இவ்வுலகம்
சின்னஞ்சிறு தண்டனைகள் மட்டுமே போதும்.

67. ஒட்டியாணம் தரித்தாய் பட்டாடையும் தரித்தாய்
ஒட்டி நிற்க நின்மேனியில் பூணூலும் தரித்தாய்
சிவசுப்ரமண்யனுக்கு ஈசனிடம் பயம் இல்லை
ஆறுமுக வேலனுக்கு உன்னிடமே பயமாகும்.

68. ஏக பாதத்தில் நீநின்றாய் நர்த்தன கணபதியாய்
ஏகாம்பரத் தலத்தில் இருக்கும் மூர்த்தியாம்
சதுர்த்தி தினங்களிலே விரதம் அனுட்டித்தால்
சங்கடம் போக்கிடுவான் சுக்ல கணபதியே.

69. குண்டு உருவத்தினான் மத்தள வயிறினான்
தண்டைச் சிலம்புடனே நடன மாடிடுவான்
ஊழ்வினைகள் அகன்றோடும் ஞானம்பெருகிவரும்
ஆழ்ந்த மனத்துடன் உன்னடியைப் பற்றினால்.

70. விக்ன விநாயகனே வந்து நிற்பாய் கண்ணெதிரில்
அக்னி மூலை நிற்கும் கன்னிமூல கணபதியே
சசிவர்ணம் சதுர்ப்புஜம் உன்னுடைய மூர்த்தி
நசித்திடுவாய் கருமங்களை நின்விழிப்பார்வையால்.

71. இரட்டை கணபதிகள் எப்பொழுதும் விசேஷமாம்
திருவலம் சுழியிலும் திருப்பாலக்கரையிலும்
இரட்டை உருவங்கள் ஈரேழு பிறப்புகளை
மறைவாகக் குறித்தருளும் சுட்டுவிளக்கமாம்.

72. சித்திபுத்தி கணநாதன் சித்தனாயாக்கிடுவான்
புத்தியில் மாற்றம் செய்து பித்தனை மாற்றிடுவான்
சோமேசுவரக் கடவுளே பித்தனல்லவா
ஆதிமூல கணபதியே சித்தனல்லவா.

73. மடமானின் வயிற்றுதித்த மங்கை வள்ளியாம்
மடந்தை தனை மணந்த சிங்கன் முருகளாம்
வள்ளிமலை மேவினான் அண்ணன் கணபதி
தள்ளியாம் சகோதரனின் மங்கல ஏற்பிற்காம்.

74. ஆனைதன் அணங்கினை மணந்த திருமணம்
தானைத் தலைவன் சேனாபதி முருகனுக்கு
தமையன் சுமுகன் பரங்குன்ற மேறி நின்றான்
அமைந்த வாழ்க்கையை அருளிச் செய்யவே.

75. ஆனை முகத்தோனே அன்புக் கடவுளே
ஆதிமூல கணபதியே நின்னடியே சரணம்
ஏகாந்த கணபதியே எப்பொழுதும் சரணம்
வேதாந்த மூர்த்தியே ஐயா உனக்கே சரணம்.

76. தாமரை மலரில் வீற்றிருக்கும் பத்ம கணபதியே
பாமரர்க்கருளும் பாதாள லோக கணபதியே
ஞான மார்க்க மருளும் மெய்ஞ்ஞான கணபதியே
போக வாழ்க்கையருளும் உச்சிஷ்ட கணபதியே.

77. பரம்பொருளைத் தந்திடுவாய் ஆதிமூல கணபதியே
சிரம் தாழ்த்தி வணங்குகிறேன் சிற்சபை கணபதியே
மருள் நீக்கி மேன்மைதரும் குருமூர்த்தி கணபதியே
அருள் தருவாய் எந்நாளும் கன்னிமூல கணபதியே.

78. பற்றற்ற வாழ்க்கையை அளித்திடவே வேண்டும்
பரிபூரண அமைதியையே தந்திடவே வேண்டும்
மட்டற்ற மகிழ்ச்சியினை அருளிடவே வேண்டும்
குறிதனை வாழ்க்கையிலே எட்டிடவே வேண்டும்.

79. பங்கயமாம் நினது பாதம் பற்றிட்டேன் ஐயா
சிந்தையிலே நின்னையே பதித்திட்டேன் ஐயா
எந்தனது பக்தியையே மெச்சிடவே நானே
உந்தனது இன்னருளை யாசிக்கிறேன் நாளும்.

80. சித்தியிலே ஞான சித்தி தந்திடும் பரம்பொருள்
புத்தியிலே எஞ்ஞான்றும் நிலைத்திடும் திருவருள்
எத்திக்கும் நோக்கிடும் கருணையாம் நோக்கு
தித்திக்கும் உன்னருளை ஏத்தவே எந்நாளும்.

81. மாலைகளாம் உந்தனுக்கு பக்தியான கீதம்
வேதங்களாம் உந்தனுக்கு பரிவான நாதம்
நாயகனாம் தேவர்களுக்கு நீயே விநாயகா
மாயனாகி உன்னருளை திண்ணமாய்த்தருவாய்.

82. அகரமாகி உகரமாகி மகரமாம் ஓம்கார ஸ்வரூபனே
ஐங்கரம் தரித்த ஆதிமூலப் பரம்பொருளே
சதுர்த்தி திதியிலே மங்கலமாய் நின்ற பரம்பொருளே
எதிர்த்தாட் கொண்டாய் என்னையெஞ்ஞான்றும் காப்பதற்கே.

83. காலைப் பொழுதினிலே கதிரவனின் கிரணங்களாய்
மாலைப் பொழுதினிலே சுக்கிரனின் அருஞ்சுடராய்
வித்தன் வியாசனுக்கு பாரதம்தனை புனைந்து
சித்தத்தினில் திளைத்திருக்கும் பரம்பொருள் சோதியே.

84. வேத மூர்த்தியாம் ஞான கணபதி
மந்திர மூர்த்தியாம் ஓம்கார கணபதி
சுந்தர மூர்த்தியாம் சுக்கில கணபதி
வித்யா மூர்த்தியாம் விக்ன கணபதி.

85. கணபதிப் புழையினிலே சோதியாய் நின்றாய் நீ
கற்பகத் தருவானாய் மருதாசலத்தினிலே
காருண்ய தேவனே அன்பு மூர்த்தியே
பேரின்ப நிலை தருவாய் கற்பகக்கடவுளே.

86. வலம்புரி விநாயகனே ஹரனின் ஸ்வரூபமே
இடம்புரி ஐங்கரனே அம்மை ஸ்வரூபமே
நின்றிருக்கும் கணபதி அர்த்தநாரி ஸ்வரூபமே
நர்த்தன கணபதி நடராசன் ஸ்வரூபமே.

87. இம்மைக்கும் மறுமைக்கும் நீயே தலைவனாம்
செம்மைக்கும் உண்மைக்கும் நீயே இறைவனாம்
உன்கருணை பாதம் பற்றி நாமே உய்யவே
பரிபூரண நல்லாசி வேண்டிடுவோம் நாமே.

88. வேலவனின் தமையனான விக்னேசுவரனே
சூலம் கொண்டு அருள்புரி ஹரனின் மைந்தா
அம்மையப்பனே உலகம் என்று போதித்த நீயே
செம்மையாய்த் தனித்து நின்றாய் மன்பதைக்காக.

89. மனதில் தைரியம் அருள்வதற்கே விநாயகனின் பூசை
ஜனனமதை விலக்கிடவே அழகனின் பூசை
குணவானாய்த் திகழ்ந்திடவே பேனகனின் பூசை
பற்றுதனை அகற்றிடவே சித்திகணபதி பூசை.

90. ஏகாந்தமாய் உன்னிடமே பேசிடவே அருள்வாய்
மோகமெல்லாம் வெற்றிகொள்ள நின்கருணை புரிவாய்
தொந்திப் பிள்ளயாராக நீ மோதகப் பிரியனானாய்
எந்தக் கணத்திலுமுனை சரணடைய பாக்கியமளிப்பாய்.

91. மூஞ்சூறு வாகனமே மூவுலகின் இயல்பாம்
தேஞ்சுவைக் கனிகளே அறுசுவை இயல்பாம்
யஞ்ஞோப வீதமே நான்கு வேதங்களாம்
மெய்ஞ்ஞான விளக்கமே முறமான செவிகளாம்.



92. வேழ முகமும் மனித மெய்யும் மிடுக்கான உருவம்
குழவியுள்ளமும் ஆனைத் திண்ணமும் மேவிய பாணி
ஆசுகவிப் புலவர்கள் ஆதியிலுனைத் தொழுவார்
மாசில்லாப் பாடல்கள் செந்தமிழில் புனைவார்.

93. தண்ணான குணத்தினால் அருகம் புல்பெருமை
பண்ணினால் இசைபாடி தண்ணளி யளிப்பார்
ஏழேழுலகங்ள் காப்பாற்றி இருக்க
ஒருநாள் சதுர்த்தி முதல் பாடியே துதிப்பார்.

94. மாதவத்தினால் உனை உமையம்மை பெற்றார்
பாதகத்தினால் வரும் வினைகளை யழிக்க
பாங்கான பூசை செய்து உன்னை ஆவஹித்தால்
சீர்தருவாய் எங்கள்மனை செற்றமாய் வாழ.

95. குற்றங்கள் யாவையும் நீக்கிடுவாயியல்பாய்
மற்ற துணை எங்களுக்கு எப்போதுமில்லை
பற்றற்ற பரிபூரண நல்வாழ்க்கை வாழ
அட்டசித்தி களையறிந்த நின்னருள் பார்வைதேவை.

96. குன்றில்லா ஊரெல்லாம் குன்றாக இருப்பாய்
குன்றிடும் போதெல்லாம் துதிக்கையினால் எடுப்பாய்
மன்றாடி யுன்னைநான் நன்றாகத் துதிப்பேன்
குன்றாக யென்னையே ஏற்றம்தந்து காப்பாய்.

97. நானென்று எண்ணாத தன்மைதனை வேண்டி
எனதென்று சொல்லாத நல்லொழுக்கம் பெற்று
உனையே நான் கைப்பற்றி எந்நாளும் வாழ
பணிவேனே குனிவேனே அட்ட சித்திவிநாயகா.

98. கயமகா அசுரனை எதிர்கொண்டு வெல்லவே
கஜமுகம் கெண்டாய் என் கருணா மூர்த்தி
கஜமுகம் கொண்டதால் சிறுகுழவி முதற்கொண்டு
சகஜமாய் எல்லோரும் அனுதினமும் தொழுவார்.

99. சலனமில்லா உன்னுருவம் மனத்தினிலே நிற்கும்
சபலங்களை அழித்திட்டு வெற்றிகளைக் கொடுக்கும்
முப்பொழுதும் எப்பொழுதும் உனையே துதித்தால்
அப்பொழுதே யளிப்பாய் செப்பரிய வாழ்வுதனை.

100. செலுவான உன்னுருவம் மனத்தினிலே நிற்கும்
வலுவான உன்னியக்கம் ஞான கணபதியாக
நாயகனாக யெனையாக்கினாய் நீயே விநாயகா
போயகல வினையாவும் பொடிப் பொடியாக.

101. மண்டியிட்டு யுனையே நான் எப்பொழுதும் துதிக்க
டுண்டி விநாயகனே நீ கடைக்கண்ணருள் தருவாய்
தொன்று தொட்டு வந்திடும் உன் மேலான அருளே
சான்றாகும் உன் கருணை பாரோர்க்கு தானே.

102. ஆனைமுக ஈஸ்வரனே ஆறுமுகன் சோதரனே
மனைமங்கல உமையம்மை மெய்யிலுருவானவனே
காவிரியினை தமிழ் மண்ணுக்கு ஈந்து தந்தருளிய
ஐங்கரத்தவனே சித்தி விநாயக வள்ளலே.

103. குங்கும வண்ணத்தினான் ஐங்கர கணபதி
மங்காத புகழளிப்பான் இப்புவிதனிலே
காமதேனுவாய் அருள்வான் கேட்டவைதனையே
தேமதுரத் தமிழால் அருள்பாடவே எப்போதும்.

104. பிரசன்ன கணபதி பிரச்சினைகளைத் தீர்ப்பான்
பிரசித்த கணபதி சித்தமதில் திளைப்பான்
வரசித்தி கணபதி வரங்களை யருளி
குருசித்தி நிலையருளி வாழவே செய்வான்.

105. எக்காலமும் என்னோடு கூடவே யிருந்து
முக்கால வினைகளை சீராக நீக்கி
துக்கங்கள் அணுகாமல் நலவாழ்வைத் தந்து
சிக்கனமாய் இப்புவியில் வாழவே செய்வாய்.



106. முந்தை வினைநம்மிடமே அணுகாமலகல
தொந்தி கணபதியின் அருளாசி பூரணமாய் வேண்டும்
உந்திடவே முன்னேற்றம் படிப்படியாய் வரவே
அந்தநல் கற்பக விநாயகனின் இன்னருள் வேண்டும்.

107. இராசாதி ராசனாம் ராச கணபதியே
ஈசாதி ஈசனாம் ஈச்ச கணபதியே
திருவீச நாதனாம் கற்பகக் கணபதியேயென்று
பேசாத நாவெல்லாம் நாவில்லை யன்றோ.

108. மண்டியிட்டு வேண்டிடுவாய் மானிடனே நீயே
தண்டு ஊன்றி நின்றிருக்கும் ஆனைகுட்ட ஈசனை
சுண்டியிழுக்கும் ஆசைகளை நீக்கிடவே நன்றாய்
வண்டு மொய்க்கும் மலர்களால் உனையர்ச்சிக்க வேண்டும்.

109. சொற்கேட்டான் கணபதியாய்க் கோட்டையூரில்
பொற்சிலையாய் அமைதியாய் நீயிருப்பாய்
செவ்வரளி மலர்களில் பூசை செய்தால்
செவ்வனே வாழவைப்பாய் மன அமைதியுடனே.

110. வல்லப கணபதியே சர்வ வல்லமை தாராயோ
சக்தி கணபதியே சர்வ சக்தியுடன் வைத்திருப்பாய்
ஞான கணபதியே அஞ்ஞானம் நீக்கிடுவாயே
ஸ்வர்ண கணபதியே வாழ்க்கையை ஸ்வர்ணமயமாக்கிடுவாய்.

111. எங்கெங்கு நோக்கிடினும் உன்னுடைய மூர்த்தி
அங்கங்கு சக்தியுடன் உன்னுடைய கீர்த்தி
உன்னுடைய உருவமோ செருக்கான நேர்த்தி
பண்ணுடைய பாடல்கள் மிடுக்கான சீர்த்தி.

112. நிறைந்திடுவாய் முப்பரிமான தோற்ற மனைத்திலும்
சேர்ந்திடுவாய் செப்பரிவான வார்த்தை யனைத்திலும்
பார்த்திடுவாய் கருணை மிகு நோக்குடன் எனையே
அளித்திடுவாய் சுந்தரமும் அமைதியான கீர்த்திதனையே.

113. பங்குண்டு உனக்கு சர்வ அயிசுவரியங்களிலே
செங்குன்ற மென நிற்கும் வல்லமையுடனே
மங்காத சீலமுடன் நெறிமுறை வாழ்க்கையே
சிங்கமென நான் வாழ அருள்வாய் திருவீசனே.

114. தான்தோன்றிப் பிள்ளையாராய் நீயிருப்பாய் குன்றினிலே
மாண்பான சீலருனை தந்தெடுத்து பூசிப்பார்
தந்தங்கள் பந்தபாச விலங்குகளை நீக்கும்
சொந்தங்கள் தானாக விளங்கிடும் வாழ்க்கையில்

115. மாந்தர்கள் தாம்செய்யும் எல்லா வினைகளும்
சேர்ந்தெடுத்து தாம் அடைந்த கருமங்களாகி
வேதத்தின் நாயகனாம் வேழமுகத்தோனின்
சோதனை களென்கிற கருவிகளெனக் கொள்வாய்.

116. அஷ்டசித்திகளறிந்தவன் பிரம்மன் குரு சுக்கிரனாவான்
சர்வ சித்திகளறிந்தவன் கணேசன் ஒருவரே
அவரைப் பணிந்து நாம் வாழ்கின்றபோது
சுவரென நிமிர்ந்து நிற்கும் பாக்கியம் அருளுவார்.

117. மாதேஸ்வர ஈசனே அம்மையப்பனானவன்
மாணிக்கமாம் பிள்ளை ஹேரம்ப கணபதியாம்
கருப்பத்தில் வளராத ஆளுடைப் பிள்ளையார்
கருத்துக்கள னைத்திலும் சோதிரூபமாயினார்.

118. வளையாத உடல் பாணி பிள்ளையார் ஒருவருக்கே
விளையாத பொருள்களிலும் வடிவமைந்திடுவார்
யதாஸ்தானம் செய்து கோரிக்கை செய்தால்
பிதாஸ்தாத்தில் பொருப்பை ஏற்றருள் செய்வார்.

119. முடிவில்லாத நீயே இயற்கைக்குக் காரணமே
முடிவை முடிவாக உரைத்து நிற்கும் கருணையே
சாந்தமான தோற்றமே எந்நாளும் கொண்டிருக்கும்
விக்ன கணபதியே என்கருத்தில் நீ நிற்பாய்.

120. சிந்தனையில் எப்பொழுதும் நின்றிடுவாய் நீயே
வந்தனைகள் பல செய்து உனையே பணிந்திடுவேன்
நிந்தனைகள் செய்தால் தொந்திர வாகுமென்று
மந்தர மூர்த்தியே நாம் திண்ணமாய் அறிவோம்.

121. பல்லுல கெங்கும் பரிமளிப்பாய் ஈசனே
செல்லுமிடமெல்லாம் சிறப்பாக ஆதரிப்பாய்
துல்லியமான அறிவு உனக்கு மட்டும்தான்
இல்லற வாழ்க்கையினை மேன்புறச் செய்திடுவாய்.

122. ஆதி அந்த மில்லாத அன்பான ஈசனே
சோதி ரூப பிள்ளையாரான யோக வாசனே
பிரசித்தி விநாயகனே யோகக் கடவுளே
மறுபிறவியிலாத நிலைதனை நீ தருவாய்.

123. துந்துபி நாதத்துடன் உன்னையே தொழுவோம்
மந்திர முதல்வனாய் மனதிலே யிருப்பாய்
சித்தியிலே ஞானசித்தி எப்போது மருள்வாய்
எத்திக்கும் காப்பாற்றும் வேதமூர்த்தி நீயே.

124. உச்சிப் பிள்ளையாராய் கும்ப ஈசன் நகரினிலே
கச்சிதமாய்த் தருவாய் கேட்டவை யனைத்தையும்
மெச்சிடுவாய் நாங்கள் செய்யும் காரியங்களை நீயே
அச்சாக மனத்திலே நிலைத்திடுவாய் ஐயா.

125. குன்றுகளனைத்திலும் அடிவாரத்தில் நீ யிருப்பாய்
சென்று வரும் பக்தர்களுக்கு உற்சாகம் தரவே
பாரதத்தை ஈந்த தெய்வம் சுவடி வடிவிலே
காவிரியை யீந்த தெய்வம் நதியின் வடிவிலே.

126. பார்போற்ற அமர்ந்திருப்பாய் கற்பக விநாயகா
மார்பினிலே யஞ்ஞோப வீதம் நாகரூபமாய்
மிடுக்கான தியானத்தில் மெய்யான தோற்றம்
கொடுப்பாய் ஈசனருளை நின்வலக்கை புறம்பாய்.

127. ஆடுவோம் பாடுவோம் நின்திருச்சபைமுன்னே
கூடிநின்று அருள்வேண்டி யாசித் திருப்போம்
மன்றாடியே யுன்னை நாம் தஞ்சமடைந்திடுவோம்
வென்றிடுவாய் யெங்களுடைய உள்ளழுக்கையெல்லாம்.

128. திருத்தடாகம் தனிலே எல்லா நதிகளுமுன்
திருச்சன்னதி வளாகத்தில் தோன்றி யிருப்பதால்
முழுமுதற்கடவுள் நீயே தானென்று ஓங்காரமாய்
செழுமையுடன் நாங்களுனை சித்தரித்திடுவோம்.

129. கற்பகம் பிள்ளையாரை ஒருதரம் தரிசித்தால்
நற்குணம் நிறைத்திடுவார் யென் கணபாமூர்த்தி
நானென்ற அகந்தை பரிபூரணமாய் அகன்றிவிடும்
ஞானசித்தி பேரருள் அக்கணமே திளைத்துவிடும்.

130. சுயம்புவாய் தோன்றி நின்ற ஞானப் பரம்பொருளின்
முன்னுருவம் மட்டுமே தரிசிக்க சத்தியமாய்
பின்புறம் அகிலாண்டகோடி சீவராசிகளாம்
காணக்கிடைக்காத சோதி தத்துவங்களாம்.

131. ஈசனுக்கே குருவாகி குகன் சொன்ன தத்துவம்
பாச வினை யறுக்கின்ற ஓம்கார தத்துவம்
ஓம்காரமே யுருவமான கற்பக விநாயகனை
நாமெல்லாம் காணலாம் திருவீசர் நகரினிலே.

132. ஆனைமுகத்தவனே அருள் தருவாய் நீயே
பானை வயிற்றினை நினைத்தேன் நானே
ஆண்டவனே அருள் குருவே கற்பகச் சோதியே
தண்டமடைந்து விட்டேன் நின்கருணையை யாசித்தேன்.

133. ஆற்றுப் படுத்துகிறேன் எல்லோரும் வாரீர்
கற்பகத் திருநகருக்கு எப்போதும் வாரீர்
கொடைவள்ளல் திருவீசர் அமர்ந்தாட்சி செய்யும்
எடுப்பான கோலத்தை திறம் காண வாரீர்.



134. காருண்யத் தோற்றத்துடன் இராச கணபதியாய்
சீருடைத் தோற்றத்துடன் உச்சிப் பிள்ளையாராய்
தோஷம் நிவர்த்திக்க மணக்குள கணபதியாய்
மோக்ஷம் கொடுத்திடுவான் கற்பகக் கணபதியே.

135. காணிப் பாக்கத்தில் அமர்ந்துவிட்டாய் காருண்யமூர்த்தியே
தோணியாக நீயெனக்கு அருளமுதைத் தந்திட்டாய்
உன்னையே சரணடைந்து விட்டேன் வேழ முகத்தவனே
மன்பதை யெல்லாம் புகழுடனே சேவை செய்ய அருளிடுவாய்.

136. நலமனைத்தும் தந்திடுவான் காருண்ய மூர்த்தி
பலமனைத்தும் தந்திடுவான் உச்சிஷ்ட மூர்த்தி
அருளனைத்தும் தந்திடுவான் கற்பக மூர்த்தி
அஷ்ட அயிசுவரியங்களைத் தந்திடுவான் ஓம்காரமூர்த்தி.

137. விநாயகரகவல் பாடிய அவ்வைப் பெருந்தகை
அற்புதம் நிறைந்த கற்பகக் களிறென
சொற்பதம் பாடிப் போற்றித்தொழுதிட்ட சோதி
ஏரகக் கணபதியைப் போற்றித் தொழுவோம்.

138. ஆதாரஸ்வரூபமாம் கற்பகக் கணபதியை
மூலமந்திரத்தின் முழு முதற் கடவுளை
அளவிடற் கரிதான சக்திக் கடவுளை நாம்
புந்தியிலே சிந்திப்போம் பரிபூரண நிலையடைவோம்.

பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் இவ்வுலகம் மேன்மையுற எல்லா ஐஸ்வர்யங்களும் நிலைத்திருக்க, எங்கள் குடும்பத்தில் எப்பொழுதும் மேவி நிற்க, நாங்கள் வேண்டுகிறோம். எனது இப்பாக்களை அவருடைய பாதங்களில் அர்ப்பணம் செய்து எல்லாவித நலன்களையும் நாடுகிறேன். அருள்புரிவாய் கருணைக்கடலே என்று யாசிக்கிறேன்.

பரிதிமதி.

## ஆசிரியர் பற்றி குறிப்புகள்

ஆசிரியர். திரு. இரவிச்சந்திரன் (பரிதிமதி) மருத்துவ இயற்பியல் பேராசிரியர். தமிழ்ப்பற்றினாலும், மனதில் உள்ள இறைவனிடம் நம்பிக்கையாலும் பாடல்கள் புனைவதில் ஆர்வம் உள்ளவர். அவர் தமிழ்நாட்டில் நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்தவர். பெங்களூர் கித்வாய் புற்றுநோய் ஆராய்ச்சிக் கழகத்தில் பேராசிரியராகப் பணி புரிந்து, பிறகு ஓமான் நாட்டில் பேரரசர் மருத்துவக் கழகத்தில் இப்பொழுது பணியாற்றி வருகிறார்.

இந்த பிள்ளையார்பட்டி திருவீசர் மணிமாலை எனும் நூலில் கற்பக விநாயகரின் அருளாற்றினையும், அவரின் சுந்தரக் கோலத்தின் எழிலையும் விவரித்து, எளிய தமிழில் பாமாலை இயற்றியுள்ளார். முழுமுதற்கடவுளாம் ஓம்கார மூர்த்தியாக அவர் கருணையை உள்ளன்புடன் விவரித்துள்ளார். நாம் செய்யும் செயல்களில் உடகருத்தாய் நின்று, விக்னங்ளை அகற்றி எப்பொழுதும் வெற்றியையளிக்கும் இந்தக் கற்பக சோதி ஐங்கரனை, மனம், வாக்கு, செயல் எல்லாம் ஒன்றுபட்டு வழிபட்டால் எல்லாவகை நன்மைகளையும் கண்டிப்பாக அருள்கிறார் என்பது யாவருமறிந்த உண்மை.

பேராசிரியர். முனைவர். இரவிச்சந்திரன் மேலும் பெரியாண்டவர் பாமாலை, திருமுருகன் பாமாலை, அரங்கனின் திருவருள், அஞ்சனை மைந்தன் பாமாலை, அரனின் திருவருள் என்ற மற்ற நூல்களையும் எழுதியிருக்கிறார். திருவீசர் மணிமாலை என்ற இந்த படைப்பினை யாவரும் வழிபாட்டு நூலாகக் கருதி, அனுதினமும் வழிபாட்டில் பயன்படுத்த வேண்டும் என்று பணியன்புடன் சமர்ப்பணம் செய்யும் அன்பு மகன்.

பரிதிமதி.



ஆசிரியர்முகவரி:

**Prof. Dr. R. RAVICHANDRAN**
F 101, Ram Adithya Apartments,
19/6 Nagappa street, Pipeline
'A' Cross Malleswaram,
Bangalore - 560 003. **Karnataka**

**(Email: ravichandranrama@rediffmail.com)**